மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

1—

பள்ளிக்குப் புதிய கட்டடம்

***48870—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, லாடவரம் ஊராட்சியில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வாழவைத்து இன்று துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நடந்து முடிந்த சட்டமன்ற இடைத் தேர்தலில் ஒன்பது நவ ரத்தினங்கள் சட்டமன்றத்திலே அமர்வதற்காக அரும் பணியாற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) இரவு பகல் பாராமல் உழைத்திட்ட

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, லாடவரம் ஊராட்சியில் மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டும் பணிகளுக்காக சர்வே எண் 85/1–ல் உள்ள 0.32.5 ஹெக்டேர் நிலத்தை பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்கியவுடன், உடனடியாக அரசு அதைப் பரிசீலித்து கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணுலகை ஆண்டு, மக்களின் மனம் கவர்ந்து, விண்ணுலகை ஆளச் சென்றுள்ள எங்கள் தெய்வத் தாய், தங்கத் தாரகை இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையில் நடுநிலை தவறாது விதிப்படியும், மரபுப்படியும் அனைவரின் நம்பிக்கையையும் பெற்று, அவையை நடத்திச் செல்லும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மலை குலைந்தாலும் நிலை குலையா மன உறுதியோடு ஆட்சியையும் கட்சியையும் கட்டுக்கோப்போடு வழி நடத்திச் செல்லும், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்துத் தரப்பினரும் பாராட்டும் வகையில் கல்வித் துறையில் மகத்தான சாதனை படைத்து வரும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஆற்றல்மிகு அண்ணன் திரு. கே.ஏ.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை என்பதால், லாடவரம் ஊராட்சிப் பகுதியில் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக நடப்பு நிதியாண்டிலேயே இந்தப் பணியை முடித்துத் தருமாறு தொகுதி மக்களின் சார்பில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்களின் பெயரில் பன்னீரோடு சேர்ந்து செல்வமும் இணைந்திருக்கிறது. ஆகவே, நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. இந்த ஆண்டிலேயே பள்ளிக் கட்டடத்தைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தென்மகாதேவமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியானது ஐந்து வகுப்பறைகள் மட்டுமே கொண்ட கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 2018–2019 ஆம் கல்வியாண்டில் 368 மாணாக்கர்களும், 2019–2020 ஆம் கல்வியாண்டில் 418 மாணாக்கர்களும் கல்வி பயின்று வருகின்றனர். இந்தப் பள்ளிக்குக் கூடுதலாக 10 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் தேவைப்படுகிறது. இதைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தமிழகத்தைப் பொறுத்தவரையில், நபார்டு திட்டத்தின் மூலமாக பல்வேறு பணிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டு, ஆங்காங்கே இருக்கின்ற பள்ளிகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கட்டடங்களைப் புதிதாகக் கட்டித் தருகின்ற திட்டம் ஆண்டுதோறும் ஏறத்தாழ 300 கோடி ரூபாய், 276 கோடி ரூபாய் என்ற முறையில் நிறைவேற்றப்பட்டு

வருகிறது. SSA திட்டத்தின் அடிப்படையில், இந்த ஆண்டு 169 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு கட்டடங்களைக் கட்டிட அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. நீங்கள் குறிப்பிடும் அந்தப் பள்ளிக்கும் இந்த ஆண்டே நபார்டு திட்டத்தின்கீழ் புதிதாக 10 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில், மாதலாம்பாடி என்ற கிராமத்திலே இடம் கொடுத்தும், இதுவரை அங்கே கட்டடம் கட்டித் தரப்படவில்லை. மேலும், ஆவூர் கிராமத்தில் பல்வேறு இடங்களில் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. ஆனால், அரசுக்கு நிலத்தை பெற்றுத் தரக்கூடிய அதிகாரிகள், பணியை விரைவாக செய்யாத காரணத்தால் பல இடங்களில் பணம் கிடைத்தும் கட்டடங்கள் கட்டப்படாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, கல்வித் துறை அதில் தலையிட்டு, எந்தெந்தப் பகுதிகளில் அரசுப் புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ, அவற்றை எடுத்து கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல எங்கெங்கே அரசு தரிசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ, அவையெல்லாம் அரசின் பள்ளிக் கல்வித் துறைக்கு வருவாய்த் துறையின் மூலமாக ஒப்படைக்கப்பட வேண்டும். அப்படி ஒப்படைக்கும்பட்சத்தில், நிதி ஒதுக்கப்பட்ட பள்ளிகளுக்கு அந்தக் கட்டடங்களை உடனடியாக கட்டித் தர இயலும். நிதியை ஒதுக்கினாலும்கூட, இடத்தைத் தராத நேரத்தில், அந்தக் கட்டடங்களைக் கட்ட இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதை மனதிலேகொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்கள்

அனைவரின் கருத்துகளையும் கேட்டறிந்து, எந்தெந்தப் பகுதிகளில் இதுபோன்ற குறைபாடுகள், தடைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி உட்பட 40 தொகுதிகளுக்கு நாடாளுமன்ற பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, ஒரு தொகுதியில் தேர்தல் நடைபெறவில்லை, தள்ளி வைத்துள்ளார்கள். எஞ்சியுள்ள தொகுதிகளில் நடைப்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 38 தொகுதிகளில் (மேசையைத் தட்டும் ஒலி) மிக அதிகப்படியான மக்கள் ஆதரவோடு 52 விழுக்காடு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்று, வெற்றி வாகை சூடி, அல்லும் பகலும் உழைத்த ஓர் இளம் தலைவர் இந்தியாவில் இருக்கின்றார் என்றால் அவர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், அண்ணன் தளபதி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு நன்றியையும் வாழ்த்துகளையும் சொல்லிக்கொள்கிறேன். அதேபோன்று இடைத்தேர்தல் நடைபெற்ற 22 சட்டமன்ற தொகுதிகளில் 13 தொகுதிகளில் வெற்றி பெற்றுத் தந்தமைக்கும் தளபதி அவர்களுடைய உழைப்பே காரணம் என்று சொல்லி, அவருக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

சென்னை புறநகர்ப் பகுதியிலுள்ள வானகரம் ஊராட்சி, விளாங்காடுபாக்கம் ஊராட்சி உள்ளிட்ட ஊராட்சிகளில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கும், கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் உயர்த்துவதற்கென்று சில விதிமுறைகள்

2019 ஜூலை 1]

இருக்கின்றன. அவ்விதிமுறைகளுக்கு உட்படுமேயானால், நிதி நிலைமைக்கேற்ப அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முற்பகல் 10—10

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே கேட்டிருக்கிறேன், அதற்குப் பதிலும் அளித்திருக்கிறார். இப்போதும் அதே கேள்வியைத் திரும்பவும் கேட்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. திருக்கோவிலூர் தொகுதியைச் சேர்ந்த சந்தைப்பேட்டை கிராமத்தில் அரசு உதவிபெறும் உருது பள்ளிகள் இருக்கின்றன. அதிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. நியமிக்கப்பட்டிருக்கின்ற ஆசிரியர்களுக்கும் ஊதியம் கிடைக்கவில்லை என்று புகார் அளித்திருக்கிறார்கள். அருள்கூர்ந்து அதை விசாரித்து, அதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருது பேசுகின்ற ஆசிரியர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பது உங்களுக்கும் தெரியும். ஆகவே, உருது பேசுகின்ற ஆசிரியர்கள் அந்தப் பகுதியில் இருப்பார்களேயானால், பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின் சார்பாக நியமித்துக்கொள்வதற்கும் அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. மாதத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பளம் என்ற அடிப்படையில், உடனடியாக அந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கும் நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும்,*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், மாயனூர் ஊராட்சி பகுதியிலுள்ள மாயனூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு திட்டத்தின் மூலமாகவும், SSA மூலமாகவும் பல்வேறு கட்டடங்களை ஆண்டுதோறும் கட்டி வருகிறோம். மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப எங்கெங்கு தேவையிருக்கிறது என்பதை உணர்ந்து, அதற்கேற்ப கட்டடங்கள் கட்டித் தரப்பட்டு வருகின்றன. சில நேரங்களில், சில இடங்களில் புதியதாக கட்டடங்கள் கட்டியதற்குப் பிறகு மாணவர்களின் எண்ணிக்கை குறைகிறது. இதையெல்லாம் அரசு ஆய்வு செய்து, எந்தெந்தப் பகுதிகளில் அதுபோன்ற நிலை இருக்கிறதோ அதை மனதிலே கொண்டு இந்தப் பணிகளை ஆற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பள்ளியில் மாணவர்களினுடைய எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறது என்பதை உணர்ந்து, உடனடியாக நபார்டு திட்டத்திலே அதை இணைப்பதற்கு இந்த ஆண்டே அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

துணை மின் நிலையம்

***23782—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—